# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8029169

1. District : மாவட்டம் Tiruppur | PS: காவல்நிலையம் V & AC | Year: ஆண்டு 2019 | FIR No.: மு.த.அ. எண் 6/2019/AC/TPR | Date: நாள் 20.7.19

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 | Sections பிரிவுகள்: 7

   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 19.7.2019 | Date to : நாள் வரை Prior to 13.10 hrs

   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.7.19 | Time நேரம் 13.15 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD Vol II | Time நேரம் 13.15 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்

   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி O/o. Joint I Sub-Registrar Office, Tiruppur approximately 2 km (towards) / Sub-Registrar Office, Palladam approximately 18 km South East

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் – District : மாவட்டம் –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் G. Babybala | (b) ~~Father's/~~ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Vijayakumar

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 53 yrs | (d) Nationality நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் Dy. Inspection cell officer | (g) Address : முகவரி O/o. District Inspection cell Officer, Collectorate Campus, Coimbatore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) Tr. Sridhar, Joint-1 Sub-Registrar (DR Cadre), Tirupur.

   2) Tr. C. Sakthivel, Temporary Sub. Registrar, O/o. Joint-1 Sub. Registrar, Tiruppur

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Separate sheet enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 20/7/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature]
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
20/7/19.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
20/7/19 at 14.30 hrs.

Name: பெயர் C. Dhatchinamoorthy
Rank: நிலை ....................No. எண் ..........
Deputy Supdt. of Police,
V & AC, Tiruppur.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.6/2019/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிகையின் தொடர்ச்சி..

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 20.07.2019-ம் தேதி 13.15 மணியளவில் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது கோயம்புத்தூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகத்தின் துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.G.பேபிபாலா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரின் விபரம் பின் வருமாறு. அனுப்புனர் திருமதி. ஜி.பேபிபாலா, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், கோயம்புத்தூர் பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். ந.க.159/2019 நாள்.20.07.2019. ஐயா, பொருள்: திடீர் தணிக்கை-நடவடிக்கை எடுக்க கோருதல்-தொடர்பாக. நேற்று 19.07.2019-ம் தேதி காலை திருப்பூர் எண்.1, இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் தற்காலிக சார்பதிவாளர் திரு.சக்திவேல் என்பவர் விடுப்பில் இருக்கும் இவ்வலுவலக மாவட்ட பதிவாளர் ஸ்ரீதர் என்பவருக்கு அவரது விடுமுறை காலத்தில் பதிவு செய்யப்பட்ட பத்திரங்களுக்கு பத்திரம் பதிவு செய்தவர்களிடம் லஞ்சமாக பணம் கேட்டுப் பெற்று ஸ்ரீதருக்கு கொடுப்பதாக மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்திருப்பதாக கிடைக்கப் பெற்ற தகவலின் பேரில் திருப்பூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு போலீஸ் பார்ட்டி சகிதம் திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. திடீர் தணிக்கையின் போது சார்பதிவாளர் சக்திவேல் ஸ்ரீதருக்காக பெறப்பட்ட லஞ்சப்பணம் ரூ.7 இலட்சத்தை ஒரு நபர் மூலமாக பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு கொடுத்து அனுப்பியதாகச் சொன்னார். பல்லடம் சார்பதிவாளர் அலுவலகம் சென்று சார்பதிவாளர் பாலமுருகப்பிரபாகரை விசாரணை செய்து பாலகிருஷ்ணன் என்பவர் மூலமாக ஸ்ரீதருக்கு கொடுக்கவிருந்த லஞ்சப்பணம் ரூ.7 இலட்சம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. திடீர் தணிக்கையின் போது சார்பதிவாளர் பாலமுருகப்பிரபாகர், சி.சக்திவேல் மற்றும் பாலகிருஷ்ணன் ஆகியோரிடம் தனியாக அவர்கள் அளித்த வாக்குமூலத்தை பதிவுச் செய்தேன். திடீர் தணிக்கை சம்பந்தமாக நேற்று 19.07.2019-ம் தேதி 13.10 மணியிலிருந்து 21.30 மணி வரை நடவடிக்கை தயார் செய்யப்பட்டது. இந்த நடவடிக்கை, மேற்படி மூவரின் வாக்குமூலங்கள் ஆகியவற்றையும்

இப்புகாருடன் இணைத்து நடவடிக்கைக்காக கொடுக்கிறேன். கைப்பற்றப்பட்ட பணம் ரூ.7 இலட்சம் ( ஏழு லட்சம் மட்டும்) இத்துடன் உள்ளது. சம்பந்தப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம் XXXX பேபிபாலா 20/7/2019 (ஜி.பேபிபாலா).Sir Received this written complaint along with the proceedings and statements on 20.7.2019 at 13.15 hrs. and a case in Tiruppur V&AC Cr.No.6/2019/AC/TPR U/s 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 was registered. ஒப்பம்.XXXX, 20/7/19, DSP, V&AC, Tiruppur. திடீர் சோதனை நடவடிக்கைகள் பின்வருமாறு திடீர் சோதனை நடவடிக்கைகள் முன்னிலை:திருமதி.G.பேபிபாலா, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்,கோயம்புத்தூர் மாவட்டம்.C.தட்சிணாமூர்த்தி,காவல் துணை கண்காணிப்பாளர்,ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,திருப்பூர்.இன்று 19.07.2019-ம் தேதி காலை திருப்பூர் மாவட்டம் எண்.1 இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் தற்காலிக சார்பதிவாளர் திரு.C.சக்திவேல் என்பவர் இந்த அலுவலகத்தில் பணிபுரியும் தற்போது விடுமுறையில் இருக்கும் மாவட்ட பதிவாளர் திரு.ஸ்ரீதர் என்பவருக்கு அவர் விடுமுறை எடுத்த காலத்தில் பதிவு செய்த பத்திரங்களுக்கு அவருக்கு லஞ்சமாக கொடுக்க வேண்டிய பணத்தை பத்திரம் பதிவு செய்தவர்களிடம் கேட்டு வாங்கி வைத்திருப்பதாக கிடைக்க பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் கோவை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.பேபிபாலா ஆகிய நான், திருப்பூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, துணை காவல் கண்காணிப்பாளர் திரு.தட்சிணாமூர்த்தி மற்றும் போலீஸ் பார்ட்டி சகிதம் மதியம் 13.10 மணிக்கு திடீர் தணிக்கை மேற்கொண்டேன். திடீர் தணிக்கையின் விபரம் வருமாறு; திடீர் தணிக்கை சகிதம் மேற்படி அலுவலகத்தினுடைய பக்கவாட்டு வாயில் வழியாக மாவட்ட ஆய்வு குழு அலுவலராகிய நான் போலீஸ் பார்ட்டி சகிதம் சென்றேன். முன்புற வாயில் வழியாக துணை காவல் கண்காணிப்பாளர் போலீஸ் பார்ட்டி சகிதம் சென்றனர். நான் பக்கவாட்டு வாயில் வழியாக சென்ற போது, பின்னர் பெயர் கேட்டு தெரிந்த இவ்வலுவலகத்தினுடைய தற்காலிக சார்பதிவாளர் திரு.C.சக்திவேல் என்பவர் நின்று கொண்டிருந்தார். அவரிடம் என்னை அறிமுகம் செய்து கொள்ள பதற்றமடைந்தார். அவரை விசாரிக்க தன்னுடைய புளூ கலர் சட்டையினுடைய இடது பக்க பாக்கெட்டில் இருந்து பணம் ரூ.410/-ஐ அவராகவே

எடுத்து ஆஜர் செய்தார். அது பற்றி கேட்க அவருடைய சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அவரை விசாரிக்க, அவர் இவ்வலுவலகத்தில் கடந்த மூன்று மாதங்களாக பணிபுரிந்து வருவதாகவும், இந்த அலுவலகத்தினுடைய மாவட்ட பதிவாளர் திரு.ஸ்ரீதர் கடந்த சுமார் ஒரு மாதமாக விடுமுறையில் சென்று விட்டதாகவும், அவர் தற்போது சென்னையில் இருப்பதாகவும் தெரிவித்தார். மேலும் சக்திவேலை விசாரித்த போது, ஸ்ரீதர் இன்று காலை தன்னை செல்போனில் தொடர்பு கொண்டதாகவும், அப்போது அவர் விடுமுறையில் இருந்த காலத்தில் பதிவு செய்யப்பட்ட பத்திரங்களுக்கு பத்திரம் பதிவு செய்தவர்களிடமிருந்து லஞ்சமாக பெறப்பட்ட பணத்தை குறித்து கேட்டதாகவும், தானும் இருக்கிறது என்று சொல்ல ஸ்ரீதர் அப்பணத்தில் தனக்கு ரூ.7 லட்சத்தை கொடுத்து அனுப்புமாறு சொன்னதாகவும் சொன்னார். மேலும் அப்பணத்தை பல்லடம் சார்பதிவாளர் பாலமுருகப்பிரபாகரிடம் கொடுத்து விடுமாறு சொன்னதாகவும், பின்னர் ஸ்ரீதர் சிறிது நேரம் கழித்து மீண்டும் தன்னை தொடர்பு கொண்டு பாலமுருகப்பிரபாகர், முருகன் என்கிற நபரை அனுப்பி வைப்பதாகவும், அவரிடம் லஞ்சமாக கேட்டுப் பெறப்பட்ட பணம் ரூ.7 லட்சத்தை கொடுத்துவிடுமாறு சொன்னதாகவும், அதனடிப்படையில் தான் மேற்படி லஞ்சமாக கேட்டுப் பெறப்பட்ட பணம் ரூ.7 லட்சத்தை இவ்வலுவலகத்தில் பணிபுரியும் கணினி விபரப்பதிவாளர் கனகராஜ் என்பவரிடம் கொடுத்து முருகன் என்கிற நபர் வந்தால் கொடுக்குமாறு சொல்லி சற்று முன் அனுப்பியதாகவும் தெரிவித்தார். அவரும் அப்பணத்துடன் முருகனுக்கு கொடுக்க சென்று விட்டதாகவும் தெரிவித்தார். பின்னர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான் சக்திவேல், துணை காவல் கண்காணிப்பாளர் மற்றும் பார்ட்டி சகிதம் வெளியே சென்று பார்த்த போது அங்கு கனகராஜ் என்கிற நபரை காணவில்லை. பின்னர் சார்பதிவாளர் சக்திவேலை விசாரிக்க அவர் கனகராஜிடம் முருகன் பணத்தை வாங்கிக் கொண்டு பல்லடம் சார்பதிவாளர் அலுவலகம் சென்றிருக்கலாம் என்று சொல்ல, அங்கு போலீஸ் பார்ட்டி சகிதம் புறப்பட்டுச் சென்றோம். சுமார் 14.00 மணிக்கு பல்லடம் சார்பதிவாளர் அலுவலகம் வந்தடையப்பட்டது. அங்குள்ளவர்களை விசாரிக்க சார்பதிவாளர் பாலமுருகப்பிரபாகர் உணவறையில் இருப்பதாக சொன்னார்கள். அங்கு சென்று அங்கிருந்த பாலமுருகப்பிரபாகரிடம் விசாரித்த போது, அவர் திருப்பூர் எண்.1 இணைசார்பதிவாளர் ஸ்ரீதர் தன்னை செல்போனில் தொடர்பு கொண்டதாகவும், தனக்கு வர வேண்டிய பணம் ரூ.7 லட்சம்

திருப்பூர் எண்.1 இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் இருப்பதாகவும், அதை தனக்கு தெரிந்தவர் மூலமாக வாங்கி தனக்கு சென்னைக்கு அனுப்பி வைக்குமாறு சொன்னதாகவும் அதனடிப்படையில் கோவையில் உள்ள முருகன் என்பவரிடம் சொல்லி அந்தப் பணத்தை வாங்கி ஸ்ரீதரிடம் சேர்க்குமாறு கேட்டுக் கொண்டதாகவும் சொன்னார். அதற்குப் பிறகு என்ன நடந்தது என்று தனக்கு தெரியவில்லை என்று பாலமுருகப்பிரபாகர் சொன்னார். பின்னர் பாலமுருகப்பிரபாகர் முருகனிடம் பேசுவதாக சொல்லி செல்போனில் பேசினார். பேசிவிட்டு முருகன் தன்னால் திருப்பூர் எண்.1 இணை சார்பதிவாளர் அலுவலகம் செல்ல முடியவில்லை என்றும், அதனால் தன்னுடைய மைத்துனர் பாலகிருஷ்ணன் என்பவரை திருப்பூர் எண்.1 இணை சார்பதிவாளர் அனுப்பியதாகவும், அவரும் அங்கு சென்று பணம் ரூ.7 லட்சத்தை வாங்கி வந்து வைத்திருப்பதாகவும் முருகன் சொன்னதாக பாலமுருகப்பிரபாகர் சொன்னார். மேலும் பாலகிருஷ்ணன் அவர்களை பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பணத்துடன் வரச் சொன்னதாக முருகனிடம் சொன்னதாக தெரிவித்தார். பின்னர் சிறிது நேரம் கழித்து பாலகிருஷ்ணன் பல்லடம் சார்பதிவாளர் அலுவலக உணவறைக்கு வந்தார். அவரிடம் விசாரிக்க, அவர் இன்று ஒரு மணி சுமாருக்கு முருகன் சொன்னதற்கிணங்க திருப்பூர் எண்.1 இணை சார்பதிவாளர் அலுவலகம் சென்று அதனருகே நின்று கொண்டிருந்தகாகவும், யாரோ ஒரு நபர் தன்னுடைய வண்டியை பார்த்து அருகே வந்ததாகவும், வந்து கோயம்புத்தூர் முருகன் அனுப்பியிருந்த ஆளா என்று கேட்டதாகவும், தானும் ஆம் என்று சொல்ல அவர் கையில் வைத்திருந்த மஞ்சள் பையை என்னிடம் கொடுத்து பணம் ரூ.7 லட்சம் இருக்கிறது என்று சொன்னதாகவும் பாலகிருஷ்ணன் சொன்னார். அதன் பிறகு தான் வீட்டிற்கு வந்து விட்டதாகவும், சிறிது நேரம் கழித்து முருகன் தன்னை தொடர்பு கொண்டு மேற்படி பணத்தை பல்லடம் சார்பதிவாளர் அலுவலகம் சென்று சார்பதிவாளர் பாலமுருகப்பிரபாகரிடம் கொடுக்குமாறு சொன்னதாகவும், அதனடிப்படையில் தானும் இங்கு வந்து பணத்தை ஆஜர் செய்ததாகவும் பாலகிருஷ்ணன் சொன்னார். அந்த மஞ்சள் பையை திறந்து நியூஸ் பேப்பரில் சுற்றி வைக்கப்பட்டிருந்த பணத்தை எடுத்துப் பார்க்க அதில் பணம் ரூ.7 லட்சம் இருந்தது. அவைகளில் இரண்டாயிரம் ரூபாய் நோட்டுக்கள் மொத்தம் 344 (ரூ.6,88,000/-) ஆகும். ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் 24 (ரூபாய் 12,000/-) ஆகும். இதை விசாரணைக்காக துணை காவல் கண்காணிப்பாளர் விசாரணைக்காக கைப்பற்றினார்.

மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான் சக்திவேல், பாலமுருகப்பிரபாகர் மற்றும் பாலகிருஷ்ணன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். இந்த நடவடிக்கையானது இன்று 19.07.2019-ம் தேதி மதியம் 13.10 மணிக்கு தொடங்கி இரவு 21.30 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த நடவடிக்கையானது சிறப்பு உதவி ஆய்வாளர் தர்மராஜ் என்பவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது. இந்த நடவடிகையின் போது சார்பதிவாளர் அலுவலக ஊழியர்கள் கண்ணியமாக நடத்தப்பட்டார்கள். இந்த நடவடிக்கைகளில் கோவை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான், துணை காவல் கண்காணிப்பாளர் திரு.C.தட்சிணாமூர்த்தி, திருப்பூர் எண்.1 இணை சார்பதிவாளர் அலுவலக தற்காலிக சார்பதிவாளர் C.சக்திவேல் பல்லடம் சார்பதிவாளர் கு.பாலமுருகப்பிரபாகர் மற்றும் C.பாலகிருஷ்ணன் ஆகியோரால் கையொப்பம் செய்யப்பட்டது. ஒப்பம் XXXX தட்சிணாமூர்த்தி 19-7-19 D.S.P, V&AC, Tiruppur, ஒப்பம் XXXX சக்திவேல் 19/7/19 (சி.சக்திவேல்), தற்காலிக சார்பதிவாளர் திருப்பூர் எண்.1 இணை சார்பதிவாளர் அலுவலகம் திருப்பூர். ஒப்பம்XXXX பாலமுருகப்பிரபாகர் 19/7/19 கு.பாலமுருகபிரபாகர், சார்பதிவாளர், பல்லடம். ஒப்பம்XXXX C.பாலகிருஷ்ணன் 19/7/2019, ஒப்பம் XXXX பேபிபாலா 19/7/19 (பேபிபாலா) (Dy.ICO),Cbe. நான் மேற்படி புகாரினையும், திடீர் சோதனை நடவடிக்கைகளையும் மேற்கண்ட நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.7 லட்சத்தையும் இன்று 20.07.2019-ம் தேதி 13.15 மணியளவில் பெற்று திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் நிலைய குற்ற எண்.6/2019/AC/TPR U/s 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 கீழ் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார் அசல், திடீர் சோதனை நடவடிக்கைள் அசல் மற்றும் திடீர் சோதனை நடவடிக்கையின் போது மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.பேபிபாலா அவர்களால் பெறப்பட்ட C.சக்திவேல், பாலமுருகப்பிரபாகர், பால்கிருஷ்ணன் ஆகியோர்களது வாக்குமூலங்களின் அசல் ஆகியவற்றை கனம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருப்பூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

20/7/19
D.SP,
V&AC, Tiruppur,